©
GOVERNMENT OF TAMIL NADU
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 247] CHENNAI, TUESDAY, NOVEMBER 25, 2014
Karthigai 9, Jaya, Thiruvalluvar Aandu–2045

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், நாகப்பட்டினம் மாவட்டம்.**

**நாகப்பட்டினம் மாவட்டம், கீழையூர் ஊராட்சி ஒன்றியம், தன்னிலப்பாடி ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் பற்றிய அறிவிக்கை**

*[ந.க.எண். 3795/அ3/உஇ(ஊ)/2012.]*

**No. VI(2)/270(b-1)/2014.**

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205 (1அ) மற்றும் 205(11) இன் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி நாகப்பட்டினம் மாவட்டம், கீழையூர் ஊராட்சி ஒன்றியம், தன்னிலப்பாடி கிராம ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. என். வைஜெயந்திமாலா என்பவர் ஊராட்சி சட்ட விதிமுறைகளை மீறி செயல்பட்டுள்ளது தொடர்பாக அன்னார் மீது தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகளுக்கு அவரால் அளிக்கப்பட்ட விளக்கங்கள் மற்றும் மேற்குறிப்பிட்டுள்ள ஊராட்சி மன்றத்தின் உறுப்பினர்களின் கருத்துகள் ஆகியவற்றை நன்கு பரிசீலனை செய்து தன்னிலப்பாடி கிராம ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. என். வைஜெயந்திமாலா என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 262(1) இன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

**நாகப்பட்டினம் மாவட்டம், கீழையூர் ஊராட்சி ஒன்றியம், தன்னிலப்பாடி ஊராட்சி மன்ற துணைத்தலைவர் பதவி நீக்கம் பற்றிய அறிவிக்கை**

*[ந.க.எண். 3795/அ3/உஇ(ஊ)/2012.]*

**No. VI(2)/270(b-2)/2014.**

நாகப்பட்டினம் மாவட்டம், கீழையூர் ஊராட்சி ஒன்றியம், தன்னிலப்பாடி கிராம ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திரு. என். ராஜ்குமார் என்பவர் ஊராட்சி சட்ட விதிமுறைகளுக்கு முரணாக செயல்பட்டு, ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியதால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 206 – உட்பிரிவு 11–ல் மாவட்ட ஆட்சித் தலைவர் / ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நாகப்பட்டினம் மாவட்டம், கீழையூர் ஊராட்சி ஒன்றியம், தன்னிலப்பாடி ஊராட்சியின், ஊராட்சி மன்றத் துணைத்தலைவர் திரு. என். ராஜ்குமார் என்பவரை ஊராட்சி மன்றத் துணைத்தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 262(1) இன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

நாகப்பட்டினம்,
**2014 நவம்பர் 24.**

**து. முனுசாமி,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

Verified RealEstate™

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.